<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 218 /2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லாசர் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பொன்னையா | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.06.2022.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

1. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டதாககும். அந்த நகைகள் உள்ள இரண்டு புகைப்படங்கள் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைகப்படத்தில் பணம் ரூ.42,000/-ம் தான் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டதாககும் அது சாபொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(மேற்படி புகைப்படத்தில் உள்ள நகைகள் திருடுபோன நகைகளின் அளவை விட குறைவாக இருப்பதால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது) இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

1. சர்ஜ்ஜிக்கு காலை 9.00 மணிக்கு சென்றேன். பிரேயர் முடிந்து வீட்டிற்கு 10.15 மணிக்கு வந்தேன். வீட்டிற்கு வெளியே உள்ள கேட்டை பூட்விட்டு சென்றேன் திரும்பி வந்து பார்த்தபோது அந்த கேட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. மேற்படி விவரத்தை எனது புகாரில்

குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய வீட்டின் மரக்கதவு உடைக்கப்பட்டிருந்தது. எனது வீட்டின் கீழ் தளத்தில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் 6 அறைகள் உள்ளது. எனது படுக்கை அறையில் காணாமல் போன நகைகளை எனது பீரோவில் வைத்திருந்தேன்.

2. இரண்டு பெண்களுக்கு உண்டான நகைகள் தனித்தனியே இரண்ட அறைகளில் உள்ள பீரோவில் வைத்திருந்தேன். மேற்படி விவரத்தையும் எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி பீரோவின் சாவிகள் அந்தந்த அறைகளில் உள்ள பெட்டுக்கு கீழே இருந்தது. பெரிய பெட்ரூம் பூட்டப்பட்டிருந்தது சிறிய பெட்ரூமின் கதவு திறந்துதான் இருந்தது. பெரிய பெட்ரூமின் கதவும் உடைக்கப்பட்டிருந்தது. மேற்படி விவரத்தை எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன். எனது வீட்டில் நகைகள் காணாமல் போன அன்றும் நாய் இருந்தது அந்த நாய் போமேரின் வகையை சேர்ந்தது.

3. எனது வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளதா என்றால் இல்லை என் வீடு தனியாக உள்ளது. வீட்டிற்கு கிழபுறம் மூன்று வீடுகள் உள்ளது. என்னென்ன நகைகள் காணாமல் போன விவரம் நான் வைத்துள்ளேனா என்றால் உள்ளது. காணாமல் போன நகைகள் பற்றிய விவரங்களை சேகரிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் மாலை 5.00 மணி ஆனது. நான் அக்கம் பக்கம் எதிரிகளை விசாரித்துவிட்டு சென்றேனா அல்லது நேரடியாக சென்றேனா என்றால் நான் நேரடியாக காவல் நிலையம் சென்றேன். எனது வீட்டில் இருந்து காவல் நிலையம் சுமார் அரை கீலோ மீட்டர் துாரத்தில் உள்ளது. நான் வீட்டில் கார் பைக் வைத்துள்ளேன்..

4. வாகனத்தில் சென்றால் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். புகாரை எனது மகள் வீட்டில் எழுதி காவல் நிலையத்தில் சென்று கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் அசாஆ1 ஆவணத்தில் புகாரில் இரண்டுவித பேனாவினால் எழுதப்பட்ட மாதிரி தெரிகிறது என்றால் ஒரே முறைதான் எழுதிக்கொடுத்தேன். நான் சம்பவம் நடந்து காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 03.05.2015 அன்று எனது வீட்டில் வைத்து நகை காணாமல் போனது குறித்தும் அதன் விரங்கள் குறித்தும் போலிசார் விசாரணை செய்தார்கள்.

5. அப்போதும் நான் 93 பவுன் நகை காணாமல் போனது என்றுதான் சென்னேன். 04.05.2015 அன்றும் என் வீட்டிற்கு வந்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். அதன்பின்னிட்டு இரண்டு முறை வந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் 6 முறை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் விசாரணையின்போது 22 பவுன் ஒரு ஐடம் என்றும் 28 பவுன் ஒரு ஐடம் என்றும் என்னிடம் எவ்வளவு கவரிங் நகை உள்ளது என்றால் இரண்டு பெண்களுக்கும்

ஒற்றை செயின் இருந்தது. கவரிங் நகையை பவுன் என்று குறிப்பிடமாட்டார்கள் என்றால் சரிதான் நான் எனது வாக்குமூலத்தில் கவரிங் நகைகளையும் பவுனாக சேர்த்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல நான் கொடுத்த வாக்குமூலங்களில் ஒரு முறை 26 ¾ கவரிங் நகை என்றும் பின்பு 28 பவுன் கவரிங் நகை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

6. மேற்படி நான் வாக்குமூலம் கொடுத்தார் தவறு என்றால் நான் கொடுக்கவில்லை. என்னால் எத்தனை பவுன் தங்க நகைகள் என்றும் கவரிங் நகை எவ்வளவு என்றும் கூற முடியாது என்றால் 93 பவுன் தங்க நகை மீதி கவரிங் நகை ஆகும். நான் நீதிமன்றத்தில் மனு போட்டு வாங்கிக்கொண்ட நகைகள் 27 ½ பவுன் என்றால் சரிதான். போலிசாரிடம் மீதம் நகைகள் என்ன ஆனது என்று கேட்டபோது மேற்படி நகைகள் தான் கிடைத்தாக கூறினார்கள். கைரேகை நிபுணர்கள் வந்து என் வீட்டில் பார்த்தார்கள். போலிஸ் மோப்ப நாய் வந்தது ஆனால் எதிரிகளை கண்டுபிடிக்கவில்லை.

7. எனது கடையில் 15 நபர்கள் வேலை செய்கிறார்கள். மேற்படி நபர்கள் யாரும் என் வீட்டிற்கு வர மாட்டார்கள். 1ம் எதிரியும் என் வீட்டிற்கு வந்ததில்லை. என் வீட்டில் காணாமல் போனது சொற்ப நகை என்றால்சரியல்ல கல்யாணத்திற்கு 10 நாள் உள்ளதால் லாக்கரில் இருந்துஎடுத்து வைத்துள்ளேன். நகைக்கான ரசீது லாக்கர் ரசீது எதுவும் போலிசார் என்னை கேட்கவில்லை. எனக்கு காவல் அதிகாரிகள்பழக்கம் என்பதால் பொய்யாக அதிகமான நகைகள் காணாமல் போனது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் அதிகமாக நகைகள் வாங்கிக்கொள்ள பொய்யாக புகார் கொடுத்ததால் அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு பிறகு 6 முறை என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்து தவறை சரி செய்ய முயற்ச்சி செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் போலிசார் பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உடுமலையில் பெரிய மளிகைக்கடை கடை என்றால் சரிதான். அரசியல் வாதிகள் போலிசார் எனது கடைக்கு வருவார்கள் என்றால் சரிதான் அதன் பேரில் செல்லவாக்கான நபர் என்பதால் எனது செல்வாக்கை பயன்படுத்தி பொய்யான புகார் கொடுத்து அதன் பேரில் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

9. இந்த வழக்கு சம்பவ சமயத்தில் 2ம் எதிரி மளிகைக்கடை நடந்த்தி வந்த விவரம் எனக்கு தெரியாது. அவர்கள் வியாபாரத்திற்காக வைத்திருந்த ரூ.42,000/ பறித்து இந்த வழக்கில் பொய்யா காட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல.